சிண்டா இளையர் மன்ற ஏற்பாட்டில் இனவாதம், மாதர்க்கு அதிகாரம் வழங்குதல், மனநலம் குறித்து ஆய்வு

# சமூகத் திட்டப் பணியில் இளம் தலைவர்கள்

இர்ஷாத் முஹம்மது

சமூகத்தில் நிலவும் பிரச்சினைகள், அக்கறைகள், சவால்களைப் பற்றி தீர ஆராய்ந்து, கலந்தாலோசித்து அதற்கான தீர்வுகளை வரையும் சமூகத் திட்டப் பணியில் 12 இளையர்கள் ஈடுபட்டனர். சிண்டா எனும் சிங்கப்பூர் இந்தியர் மேம்பாட்டுச் சங்கத்தின் பிரிவாக இயங்கும் சிண்டா இளையர் மன்றத்தின் ஏற்பாட்டில் 15 வார திட்டமானது சிண்டா இளம் தலைவர்கள் திட்டம்.


இனவாதம், மாதர்க்கு அதிகாரம் வழங்குதல், மனநலம் ஆகிய மூன்று அம்சங்களை மூன்று இளையர் குழுக்களும் அலசி ஆராய்ந்தன.

திட்டத்தில் பங்குபெற்று வெற்றிகரமாகத் தேர்ச்சி அடைந்த 12 இளையர்களும் இம்மாதம் 3ஆம் தேதியன்று சிங்கப்பூர் கல்சா சங்க மண்டபத்தில் நடந்த பட்டமளிப்பு விழாவில் கௌரவிக்கப்பட்டனர்.

சிண்டாவின் தலைமை நிர்வாக அதிகாரி திரு அன்பரசு ராஜேந்திரன் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு பங்கேற்பாளர்களுக்கு சான்றிதழ் வழங்கினார்.

நோய்ப் பரவல் சூழலால் நீண்ட இடைவெளிக்குப் பின்னர் நடந்த இந்த நேரடி நிகழ்வில் சிண்டாவின் தலைமை செயல்பாட்டு அதிகாரி திரு தம்பிராஜா, பங்குபெற்ற இளையர்கள், அவர்களின் பெற்றோர், சிண்டா இளையர் மன்ற தொண்டூழியர்கள் என மொத்தம் 30 பேர் கலந்துகொண்டனர்.

மேலும் பலர் நேரலையாகவும் கலந்துகொண்டனர். சிண்டாவின் தலைவரும் பிரதமர் அலுவலக அமைச்சரும் நிதி, தேசிய வளர்ச்சி இரண்டாம் அமைச்சருமான குமாரி இந்திராணி ராஜா தமது வாழ்த்துச் செய்தியைக் காணொளிப் பதிவு மூலம் இளையர்களுக்கு வழங்கினார்.



இனவாதம் தொடர்பான தங்களின் திட்டப் பணியைப் படைத்த இளையர் குழு, அவரவர் தங்களுக்கு ஏற்படும் இனவாதம் தொடர்பான அனுபவங்களைப் பிறருடன் வெளிப்படையாக பகிர்ந்துகொள்ள வேண்டும் என்பதை வலியுறுத்தினர். படம்: தமிழ் முரசு

நிகழ்ச்சியில் உரையாற்றிய திரு அன்பரசு, இளையர்களின் துடிப்பான செயல்பாடு வரவேற்கத்தக்கது என்றும் இன்னும் நிறைய இளையர்கள் சமூக சேவையாற்ற முன்வரவேண்டும் என்றும் கூறினார்.

"நீங்கள்தான் மாற்றத்தைக் கொண்டுவரக்கூடிய சக்தி படைத்தவர்கள். அதனால் உங்களுக்குப் பொறுப்புகள் உள்ளன. இளையர் சக்தி நமக்கு மேலும் தேவை," என்றார் அவர்.

எந்த சமூகமும் நிறைவான சமூகமாக இருக்கமுடியாது. இருப்பினும் முடிந்தவரை சிறந்த சமூகமாக இருக்கவே அனைவரும் முயற்சிக்கிறோம் என்ற கருத்தைப் பகிர்ந்த திரு அன்பரசு, கடந்த சில ஆண்டுகளாக இனவாதம், மனநலம், குடும்ப வன்முறை போன்ற பிரச்சினைகள் நம் சமூகத்தில் தலைதூக்குவதை நினைவூட்டினார்.

"அந்தப் பிரச்சினைகள் மேலும் மோசமாகாமல் எப்படி சமாளிப்பது என்பதைக் கண்டறிவது நமது பொறுப்பு," என்றார் அவர். பெற்றோரைக் கைவிட்டுவிடாதீர்கள் என்று ஆணித்தரமாக இளையர்களுக்கு அறிவுறுத்தினார் திரு அன்பரசு.

"முதியோர் பலர் தனிமையில் தவிக்கின்றனர். அந்த எண்ணிக்கை அதிகரித்து வருகிறது," என்று அவர் விளக்கினார்.

"ஒவ்வொருவருக்கும் சவால்கள் உள்ளன. எல்லோரும் வெவ்வேறு நிலைகளிலிருந்து தொடங்குகிறோம் என்பதையும் நாம் அறிய வேண்டும். சோதனைகளை சாதனைகளாக்குவோம்," என்று இளையர்களுக்கு உற்சாகம் ஊட்டினார்.

### இளையர்களின் பகிர்வு

சிண்டா இளம் தலைவர்கள் திட்டத்தில் பங்குபெற்ற சில இளையர்கள், தங்கள் அனுபவத்தைப் பற்றி வருகையாளர்களுடன் பகிர்ந்துகொண்டனர்.

"மேடையில் உரையாற்றுவது என்றாலே முன்பெல்லாம் எனக்கு கால் நடுங்கும். ஆனால் தற்போது உங்கள் முன் நான் உறுதியுடன் பேசுகிறேன். இந்தத் திட்டத்தின் அனுகூலங்களில் இதுவும் ஒன்று," என்றார் ஸ்ரீ துர்காஷினி.

நிகழ்ச்சியில் மூன்று குழுக்களும் தங்களின் ஆய்வுகளை சுவரொட்டிகள், காணொளிகள் என வெவ்வேறு விதமாகப் படைத்தனர்.

மாதர்க்கு அதிகாரம் வழங்குதல் குறித்த படைப்பு பற்றி விளக்கிய குமாரி மதினா பீவி, தாம் கலப்புத் தற்காப்புக் கலையைக் கற்றுள்ளது உள்ளிட்ட சில சுவாரசியமான அனுபவங்களைப் பகிர்ந்தார்.

இனவாதம் குறித்து விளக்கிய குழுவினர், வெளிப்படையாக தங்களின் அனுபவங்களை அனைவருடனும் பகிரும் தன்மை வேண்டும் என்றனர். சுவரொட்டி முழுதும் இனவாதக் கருத்துகளை அவர்கள் எழுதி வைத்திருந்தனர்.

பதற்றம் என்றால் என்ன, அதைக் களையும் வழிகள், உதவிக்கு எவரை அணுகலாம் போன்றவற்றை மனநலம் குறித்து ஆராய்ந்த குழு படைத்தது. மற்றவர்களை உற்சாகப்படுத்தும் வகையில் தன்முனைப்பு வாசகங்களை எழுதி அனைவருக்கும் குழு வழங்கியது.

தலைமைத்துவம், குழுவாக ஒற்றுமையுடன் பணியாற்றுதல், புத்தாக்கச் சிந்தனை, மேம்பாட்டுத் திறன், இந்திய சிங்கப்பூரர் அடையாளத்தை ஆழமாகக் கண்டறிதல், தீர்வு காண்பது போன்ற திறன்களை மேம்படுத்துவதை இத்திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

சிண்டா இளையர் மன்றம் 17 வயதுக்கும் 35 வயதுக்கும் இடைப்பட்ட இளையர்களை அடையாளம் கண்டு, வருங்காலத் தலைவர்களை அரவணைத்துச் சமூகத்திற்கு அவர்கள் சேவையாற்ற ஊக்குவிக்க முனைகிறது.

> தங்களையும் தாண்டிச் சமூகத்தின் தேவைகளில் உங்கள் நண்பர்களை அக்கறை செலுத்தச் செய்யுங்கள். உங்கள் விருப்பப்படி எதிர்காலத்தை வடிவமைக்கக்கூடிய உங்களது சக்தியைக் குறைத்து எடைபோட வேண்டாம்.
>
> **துர்கா ராஜேந்திரன், சிண்டா இளையர் மன்றத் தலைவர்**

கடந்த 2017ஆம் ஆண்டு இந்தத் திட்டத்தில் பங்கேற்பாளராக இருந்த தாஷினி சண்முகம், இவ்வாண்டு திட்டத்தை இணைத் தலைவராக வழிநடத்தினார். அவருடன் மிருதுலா குமாரும் இணைந்து செயல்பட்டார்.


சிண்டா இளையர் மன்றத் தலைவர் துர்கா ராஜேந்திரன், 29, இந்த ஆண்டுத் திட்டத்தின் ஆலோசகராக இருந்தார்.

"தங்களையும் தாண்டிச் சமூகத்தின் தேவைகளில் உங்கள் நண்பர்களை அக்கறை கொள்ளச் செய்யுங்கள்," என்று அறிவுறுத்தினார் துர்கா.

"உங்கள் விருப்பப்படி எதிர்காலத்தை வடிவமைக்கக்கூடிய சக்தி உங்களுக்கு உள்ளது. அதைக் குறைத்து எடைபோட வேண்டாம்," என்று அவர் கூறினார்.

# சுகாதாரப் பராமரிப்பில் புத்தாக்கம்: இளையர்களுக்கு விருது






தேசிய சுகாதார, புத்தாக்க விருது வென்ற குழுக்களில் இடம்பெற்றிருந்த ரெத்தினம் (இடம்) மற்றும் முகம்மது ரசீன்.
**படங்கள்: டான் டோக் செங் மருத்துவமனை, ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ்**

ஜனார்த்தனன் கிருஷ்ணசாமி

உலகநாடுகளின் சுகாதாரக் கட்டமைப்புகளுக்குச் சவால் விடுத்து அழுத்தத்தை ஏற்படுத்தியுள்ளது கொவிட்-19 சூழல். இந்த நெருக்கடியிலும் நோயாளிகளின் நிலைமையை மேம்படுத்த, புத்தாக்கத்தைக் கையாள முடியும் என்று காட்டியுள்ளனர் தேசிய சுகாதார, புத்தாக்க விருதை வென்றவர்கள்.

விருது வென்றவர்களில் டான் டோக் சேங் மருத்துவமனையில் ஏழு ஆண்டுகளாக பணியாற்றும் மூத்த 'ஃபிசியோ' உடற்பயிற்சி சிகிச்சையாளர் ரெத்தினம் கணேசனும் ஒருவர்.

இவரின் குழு உருவாக்கிய 'ஹார்ட்-ட்ரேக்' (Heart-Track) திறன்பேசி செயலி, இதய நோயாளிகளுக்கு உதவவல்லது. இதய அறுவை சிகிச்சை நோயாளிகள் எந்த அளவுக்கு உடற்பயிற்சி செய்யலாம் என்பதற்கு வழிகாட்டுவதுடன் அவ்வாறு அவர்கள் உடற்பயிற்சி செய்யும்போது இதயத்துடிப்பு உள்ளிட்ட சில அம்சங்களைச் செயலி கண்காணிக்கிறது.

செயலி உருவாக்கத்திற்கான தொழில்நுட்ப, மருத்துவத் தகவல்களைத் திரட்டித் தந்தார் 31 வயது ரெத்தினம்.

அத்துடன் செயலியை சோதித்துப் பார்ப்பது, செயலியைப் பற்றி மருத்துவக் கூட்டங்களில் விளக்குவது போன்ற பொறுப்புகளும் அவருக்குத் தரப்பட்டன.

"2019ஆம் ஆண்டு நடந்த சிங்கப்பூர் மருத்துவ காங்கிரசில் நானும் என் குழுவினரும் இந்தச் செயலி குறித்து பேசினோம்," என்று அவர் தெரிவித்தார்.

2018ஆம் ஆண்டில் தொடங்கிய செயலி உருவாக்கப் பணிகள், தற்போது இறுதிக் கட்டச் சோதனையில் உள்ளது என்று கூறிய ரெத்தினம், செயலியின் வெளியீட்டுத் தேதி இன்னும் உறுதி செய்யப்படவில்லை என்றார்.

செயலி தொழில்நுட்பம் தனக்குப் புதிது என்றாலும் நோயாளிகளின் நலன் மீதான அக்கறையே, இத்தொழில்நுட்பத்தின் மீதான ஆர்வத்தைத் தூண்டியது என்றார்.

"இதய நோயாளிகள் மருத்துவமனைக்குச் செல்ல வேண்டிய அவசியம் இருக்காது. அன்றாட வாழ்க்கையில் உடற்பயிற்சிகளைத் தகுந்த முறையில் திட்டமிட செயலி உதவுகிறது," என்று அவர் கூறினார்.

விருது வென்றதில் மனநிறைவு அடைவதாகக் கூறிய ரெத்தினம், கிருமிப் பரவல் சூழலின் கடுமையை எதிர்கொண்டு நோயாளிகளுக்காக போராடிய இந்த அனுபவம், மறக்க முடியாதது என்றார்.

விருது வென்ற குழுக்களில் இடம்பெற்ற மற்றொருவர், 32 வயது முகம்மது ரசீன் சம்சுதீன்.

டான் டோக் செங் மருத்துவமனையின் உருமாற்றப் பிரிவில் துணை நிர்வாகியாகப் பணியாற்றுகிறார் இவர். குறைவான வளங்களை நிறைவாகப் பயன்படுத்தி மருத்துவத் துறையினருக்காக தொழில்நுட்ப வசதிகளை ஏற்படுத்த உதவியுள்ளார்.

"மேம்பாட்டுத் திட்டங்களுக்கான வசதியை ஏற்படுத்தித் தருவதும் திறன்களை வளர்ப்பதற்கு துணையாக இருப்பதும் எங்கள் பிரிவின் முக்கிய இலக்குகளாகும்," என்று அவர் கூறினார்.

பிறருக்குப் பயிற்சி வகுப்புகளை ஏற்பாடு செய்வதில் ஆர்வம் கொண்டுள்ள ரசீன், தமது வேலைக்கான ஒவ்வொரு பணித்திட்டத்திலும் உள்ள சவாலுக்குத் தீர்வு காணும் அனுபவம் சுவாரசியம் என்றார்.

தாதியர், மருந்தக நிபுணர்கள், மருத்துவப் பராமரிப்பாளர்கள் ஆகியோர் தாம் பங்காற்றிய பணித்திட்டத்தில் ஈடுபட்டதாக ரசீன் கூறினார். வளங்கள் விரயமடைவதைக் குறைக்கும் அதே வேளையில் இருக்கும் வளங்களை முழுமையாகப் பயன்படுத்தும் தமது திட்டம், கொவிட்-19 சூழலுக்குப் பொருத்தமாக இருந்ததாகக் கூறினார்.

"எந்த இடத்தில் இருந்தாலும் கற்றல் தொடரும்படி வகைசெய்யும் செயலியை நாங்கள் உருவாக்கியிருக்கிறோம். மின்னிலக்க முறை மூலம், கற்பவரே தமது கற்றலை வழிநடத்திச் செல்கிறார்," என்று அவர் கூறினார்.

கடந்தாண்டு ஜூலை மாதத்திற்கும் இவ்வாண்டு மார்ச் மாதத்திற்கும் இடையே சுமார் 670 ஊழியர்கள் இந்தச் செயலியுடன் இணைந்தனர்.

இந்த எண்ணிக்கை, வழக்கமான வகுப்பறைச் சூழலில் நடத்தப்படும் வகுப்புகளில் சேரும் எண்ணிக்கையான 400ஐக் காட்டிலும் அதிகம் என்று ரசீன் தெரிவித்தார். இத்தகைய வகுப்புகளுக்கான தயாரிப்பு நேரம் 90% மிச்சமானதாக அவர் கூறினார்.

விருது பெற்றது குறித்து மகிழ்ச்சி என்றாலும் நோயாளிகளுக்கு இத்திட்டத்தால் கிடைக்கப்போகும் பயனை நினைத்து மேலும் திருப்தி அடைவதாக ரசீன் தெரிவித்தார்.

# இணையத்தில் திரைப்படங்கள் வெளியீடு - இளையரிடையே வரவேற்பு, பரிதவிப்பு

*மக்கள் திரைப்படம் பார்க்கும் முறையிலும் கொவிட்-19 சூழல் மாற்றத்தை ஏற்படுத்திவிட்டது. திரையரங்குகள் மூடப்பட்டதை அடுத்து 'நெட்ஃபிளிக்ஸ்' (Netflix), 'அமேஸான் பிரைம்வீடியோ' (Amazon Prime video), 'ஹாட்ஸ்டார்' (Hotstar) போன்ற தளங்கள் சூடுபிடித்துவிட்டன. பல புதிய திரைப்படங்களும் நாடகத் தொடர்களும் இத்தளங்களில் நேரடியாக வெளியிடப்பட்டுள்ளது குறித்து கேட்டபோது சில இளையர்கள், தங்களின் மாறுபட்ட கருத்துகளைப் பகிர்ந்து கொண்டனர்.*


*- ஆர்த்தி சிவராஜன்*



"நெட்ஃபிளிக்ஸ் தளத்தை முதலில் நாடினேன். அதில் இல்லாத நிகழ்ச்சிகளை அமேஸான் பிரைம்வீடியோ தளத்தில் கண்டு களித்தேன். எல்லா தளங்களிலும் சந்தா உறுப்பினராவதற்குப் பதிலாக ஏதேனும் ஓரிரு தளங்களில் பதிவு செய்துகொள்வது சிறப்பு."
- மதுசுதன் சரவணன், 22, என்யுஎஸ் இயந்திரப் பொறியியல் துறை மாணவர்



"பெரும்பாலான நேரங்களில் என் பெற்றோர் திரையரங்கு செல்வதை விரும்புவதில்லை. அதனால் அவர்களுடன் புதிய படங்களைப் பார்க்க முடியாது. தவிர, வேறு சில வேலைகளைச் செய்ய வேண்டியிருந்தால் இணையத்தளத்தில் திரைப்படத்தை எந்நேரத்திலும் என்னால் நிறுத்திவைக்க முடிகிறது."
- சஹாரிகா கமலக்கண்ணன், 25, விண்வெளித்துறை மாணவி



"இணையத்தளப் பயன்பாட்டுக்குச் சந்தா கட்டணம் இருந்தாலும் அத்தளங்களில் புதிதாக வெளியிடப்படும் ஒவ்வொரு திரைப்படத்தையும் பார்க்க கூடுதல் கட்டணம் இல்லை. திரையரங்கில் ஒவ்வொரு படத்திற்கும் ஒரு கட்டணம் செலுத்த நேரும். நெட்ஃபிளிக்ஸ், அமேஸான் பிரைம்வீடியோ தளங்களால் பணம் மிச்சமாகிறது." - ரிதுமிதா சரவணன், 25, 'டிஜிபஸார்' இணை நிறுவனர்



"நண்பர்கள், குடும்பத்தாருடன் திரையரங்கு செல்லும் காலத்துக்காக காத்திருக்கிறேன். திரையரங்கில் சோளப் பொறி சாப்பிடும் காலம் மீண்டும் வரவேண்டும். ஆனால் திரையரங்கம் ஒரு பாதுகாப்பான இடம் என்பதை முதலில் நாம் உறுதி செய்ய வேண்டும் என்பதை உணர்கிறேன்."
- சங்கீதா பாஸ்கர், 25, எம்.பி.பி.எஸ். பட்டதாரி



"இத்தகைய ஓடிடி (OTT) இயங்குதளங்கள், திரையரங்குகளுக்கு மாற்றாக இருக்க முடியாது, ஏனெனில் திரையரங்குச் சூழலில் ஏற்படும் அதே அனுபவத்தைத் தளங்கள் வழங்க இயலாது."
- கௌதம் பாஸ்கர், 25, இணையப் பாதுகாப்பு பொறியாளர்

**படங்கள்: மதுசுதன், சஹாரிகா, ரிதுமிதா, சங்கீதா, கௌதம்**